**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.30/2020**

2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 21.08.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | குமார் | ஜாதி | : |
| த /பெயர் : | உத்திராபதி | மதம் | : |
| கிராமம் : | | தொழில் | : |
| வட்டம் : | | வயது | : |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் கடந்த 1994-ல் நடந்தது. எனது வழக்குரையில் தாவா சொத்தை என் மனைவி சாந்தி கடந்த 1992 வாய்மொழியாக கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்றால்? சரியல்ல. தாவா சொத்து எத்தனை அயிட்டம் என்றால் 3 அயிட்ட சொத்துக்கள் ஆகும். சர்வே எண்.124/9-ல் 22 செண்ட் 440/29 ல் – 6 செண்ட், 440/37-ல் - 4 செண்ட் ஆகும். இதை தவிர 7 அயிட்ட சொத்துக்களை நான் கிரையம் வாங்கியுள்ளேன். 7 அயிட்ட சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான்.

2. நான் வாய்மொழியாக கிரையம் வாங்கிய காலத்தில் என் அண்ணன் ராஜமாணிக்கத்தின்பேரில் முதல் 2 அயிட்ட சொத்துக்களை எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தம் எழுதி சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் செய்துக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வெற்று பத்திரத்தில் கையொப்பம் செய்துக்கொடுத்தேன். எனது அண்ணன் பேரில் வாங்கிய பத்திரத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அதன் அடிப்படையில் அந்த பத்திரத்தில் கடைசியாக 1வதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்கண்ட ஆவணம் **பி.சா.ஆ.1** ஆகும். (பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் குறியீடு செய்ய இயலாது என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

3. கடந்த 15.10.1995-ல் நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து இந்த பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டதல்ல. அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானதாகும். மேற்கண்ட ஆவணத்தில் கையொப்பம் செய்தது உண்மை. நான் ரூ.20,000/- பெற்றுக்கொண்டு, கிரையம் செய்யும்போது மீதி தொகை பெற்றுக்கொள்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த ஆவணத்திற்கு மாறாக நான் மோசடியாக ஆவணத்தை ஏற்படுத்தி இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. கடந்த 17 வருடமாக 5/3, 2ம் தெரு, ஆள்வார் திருநகர், சென்னை என்ற முகவரியில் குடும்பத்துடன் இருந்து வருகிறோம். எனக்கு 3 பிள்ளைகள் உள்ளார்கள். எனது மகளுக்கு திருமணமாகி இரண்டு மகன்கள் வேலை பார்த்து வருகிறார்கள். எனது மகளை படிக்க வைத்து திருமணம் செய்து கொடுத்தது சென்னையில் தான் என்றால் சரிதான். எனது ஆதார் கார்டு, குடும்ப அட்டை அனைத்திலும் பாலையூர் முகவரிதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக 2ம் பிரதிவாதி பூவம்மாள், அவரது கணவர் மற்றும் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். 1995- ஆம் வருடம் பூவம்மாள் என்பவரிடமிருந்து நான் கிரையம் வாங்கியபிறகு அந்த சொத்தை 2ம் பிரதிவாதி என்னிடம் கிரைய ஒப்பந்தம் செய்துக்கொண்டார் என்றாலும், அதை நான் கிரையம் செய்து கொடுக்க தவறியதால் கடந்த 1998- ஆம் வருடம் அதன் உரிமையாளரான பூவம்மாள் என்பவரிடம் வெண்ணிலை கிரைய பத்திரம் எழுதி வாங்கினார் என்றால் சரியல்ல.

6. கடந்த 2001-ல் கிரைய ஒப்பந்தத்தை புதுப்பித்து பூவம்மாள் ராஜமாணிக்கத்திற்கு ஒரு வெள்ளை தாளில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியது தொடர்பாக எனக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் இல்லை. அந்த அறிவிப்பில் கிரைய ஒப்பந்தத்தை மறைத்து, வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. இடையில் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தை மறைத்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 1992 ஆம் வருடம் வாய்மொழியாக கிரையம் பெற்று தற்போதுவரை நான் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன்.

7. என் மனைவி பெயரில் எந்த தேதியில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் கடந்த 20.01.2020 ஆம் தேதி கிரையம் வாங்கப்பட்டது. அதற்கு பிறகு ஏற்பட்ட வருவாய் ஆவணங்களை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதற்கு முன்புள்ளவருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2020-2021 ஆம் ஆண்டிற்குரிய வீட்டு வரி ரசீதுகள் என் பெயரில் இல்லாத வீட்டிற்கு வீட்டு வரி ரசீது வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. முத்துகிருஷ்ணன் என்பவர் கடந்த 2019 ஆம் வருடம் கிரையம் பெற்று அங்கு வீடு கட்டி குடும்பம் நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்திலுள்ள வீட்டில் மின் இணைப்பு உள்ளதா? என்றால் இல்லை. தாவா சொத்தில் மின் இணைப்பு இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. அந்த மின் இணைப்பு முத்துகிருஷ்ணன் பெயரில் இருந்தது என்றாலும், நான் மின்சாரத்துறைக்கு அறிவிப்பு அனுப்பி அதன்பிறகு துண்டிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் சொத்தை அபகரிக்க வேண்டி வேறு இடத்திலிருந்து மின் இணைப்பை தாவா சொத்திற்கு கொண்டு வந்து மோசடியாக இணைப்பு கொடுத்துள்ளார்கள்.

9. 1ம் பிரதிவாதி முத்துகிருஷ்ணன் பயன்படுத்தி வந்த மின் இணைப்பைதான் மோசடியாக இணைப்பு கொடுத்துள்ளார் என்று சொல்லி நான் மின்சார துறைக்கு கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள வீட்டில் 1ம் பிரதிவாதி மின் இணைப்பு இல்லாமல் இருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் முத்துகிருஷ்ணன் வீடு கட்டியுள்ளார். அதற்கு பின்னால் ஒரு குட்டை உள்ளது என்றாலும், அதிலிருந்து மண்ணை எடுத்துதான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

10. தாவா சொத்திற்கு பின்புறத்திலுள்ள குட்டை குறித்து நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் அந்த இடத்தில் குட்டை இல்லை. தற்போதுதான் அந்த இடத்தில் குட்டை உள்ளது. நான் தற்போது குட்டை இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் ராஜமாணிக்கம் 1ம் பிரதிவாதி முத்துகிருஷணனிடம் 26 குழியும், 3 ம் நபரிடம் 3 குழி விற்கப்பட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள்

என்றால் சரியல்ல. மேற்கண்ட உண்மையான சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. தாவா சொத்தில் கிரையம் வாங்கியதற்கு முன்போ, அதற்கு பின்பும் அந்த இடத்தில் நான் அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. நான் 3ம் நபரிடம் கடன் வாங்கிக்கொண்டு சென்னை சென்றுவிட்டதால், அவர் என்னை சென்னையிலிருந்து அழைத்து வந்து ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல. நான் பெற்ற கடனை எல்லாம் என் அண்ணன் ராஜமாணிக்கம் தான் அடைத்தார் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பிறகு தாவா 3 அயிட்ட சொத்துக்களையும் என் அண்ணனுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

12. 20.04.2020 ல் நான் கிரையம் பெற்ற சொத்தை என் மனைவி என் அண்ணனிடம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சென்னை சென்று 30 வருடமாக இருப்பதால், தற்போது தாவா சொத்து அதிக விலைக்கு விற்பனை செய்ய வாய்ப்பு உள்ளது என்பதால் என் அண்ணனிடம் அதிக தொகை கேட்டு அவர் கொடுக்க மறுத்ததால் அவர் மீது கோபம் கொண்டு பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. தற்போது புதியதாக கிரையம் பெறுவதற்கு முன்பாக முத்துகிருஷ்ணன், ஜீவகாருண்னியன், சுப்ரமணியன், குப்புசாமி, அவரது மகன் முருகையன், கிருஷ்ணமூர்த்தி, நாகரெத்தினம் ஆகியோர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும், எந்த காலத்திலும் என் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள சொத்து குறித்து மட்டும் தான் பிரச்சனை உள்ளது. மற்ற சொத்துக்களை நான் கிரையம் செய்து கொடுக்கவேண்டியதில்லை. இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court
and read over/interpreted to the witness
and admitted by him/her to be correct
S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.